JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| STC.No. | 531/2024 | Crime No. | 112/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-2 தாண்டாயி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 26th day of February 2026 | | |

**எதிரி ஆஜர்**
**முதல் விசாரணை**

நான் தற்போது கூலிக்காரன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 1 – 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 09.00 மணிக்கு நான் மேட்டூர் செல்லும் சாலையில் கரும்பக்கவுண்டன் புதூரில் உள்ள மேட்டூர் செல்லும் சாலையில் நின்று கொண்டிருந்தேன். ஒரு வண்டி என் மீது வந்து மோதியது. நான் கீழே விழுந்து எனக்கு அடிப்பட்டு விட்டது. பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு எதுவும் தெரியவில்லை. அந்த விபத்தில் எனக்கு இடது கால், இடது கை மற்றும் வயிறு ஆகிய இடங்களில் அடிபட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரங்களை சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 23.02.2024 ஆம் தேதி காலை 8:30 மணிக்கு நான் பவானி – மேட்டூர் ரோடு கருமகவுண்டன்புதூர், கூலிக்காரன்பாளையம் பஸ் ஸ்டாப் அருகில் ரோட்டை கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நடந்து கடந்தபோது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த பிறகு கேட்டு தெரிந்த TN 52 K 5068 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் CD 100 பைக்கை அதன் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்து என் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றும் இந்த விபத்தில் எனது இடது கை, இடது கெண்டைக்கால், வலது கால் பாதம் ஆகிய இடங்களில் இரத்தக்காயமும், வலது கால் முட்டியில் இரத்தக் காயமும் ஏற்பட்ட விட்டது என்றும் அங்கிருந்தவர்கள் எனது பேரன் பிரகாசுக்கு போன் செய்ததால் எனது பேரன் பிரகாஷ் விபத்து நடந்த இடத்திற்கு வந்து என்னை பார்த்து விசாரித்துவிட்டு ஒரு தனியார் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.26 06:06:09 +0530

என்னை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைக்காக சேர்த்து அங்கிருந்து மருத்துவர் எனக்கு முதல் உதவி சிகிச்சை கொடுத்து மேல் சிகிச்சைக்காக பெருந்துறை சானிடோரியம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு, தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.26 06:06:16 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani